மூடிவிட்டார்கள். இதனால் அங்கு பணிபுரியும் ஊழியர்கள் மற்றும் ஓய்வுபெற்ற ஊழியர்கள், உதவித் தொகை மற்றும் மருத்துவ சிகிச்சை பெறுவதற்கு 3 கி.மீ. சுற்றி உள்ளே வர வேண்டியுள்ளது. மேலும் IIT வளாகத்தின் உள்ளே Vanavani, KV-IIT என இரண்டு பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகிறார்கள். இவை எல்லாவற்றையும்விட மக்களிடம் இப்பிரச்சினை sensitive feelings-ஐ உருவாக்கியுள்ளது. காரணம், அப்பகுதி முழுக்க வாழும் மக்கள் ஆதி திராவிடர்களாவார்கள். தங்களுக்கு மட்டுமே இந்த நிலை உருவாக்கப்பட்டுள்ளது என அவர்கள் மனம் புண்படக்கூடிய வகையில், வேதனைமிக்க உணர்வாக இதனைக் கருதுகிறார்கள். எனவே, மீண்டும் காந்தி சாலையில் உள்ள gate-ஐத் திறந்து, மக்களின் சமூகம் சார்ந்த வேதனை தரும் தடுப்புச் சுவரை அகற்ற மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது என்னுடைய துறைக்கு வருகின்ற கேள்வி அல்ல. இருந்தாலும்கூட, IIT என்ற முறையில், வேளச்சேரியில் இருக்கக்கூடிய மக்கள், அதுவும் ஆதி திராவிட மக்கள் வரும் வழியில் சுவர் எழுப்பப்பட்டிருக்கிறது, அங்கே ஒரு வழி இருந்திருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். நம்முடைய உயர் கல்வித் துறை அமைச்சரும், நானும் அவர்களோடு பேசி, மத்திய அரசிடமிருந்து அதை உடனடியாகத் திறப்பதற்கான உத்தரவை பெறுவதற்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 17, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் க. பொன்முடி, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

17—

பகுதிநேர நியாய விலைக் கடை

***52675—முனைவர் க. பொன்முடி:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2020 ஜனவரி 9]

திருக்கோவிலூர் தொகுதிக்குட்பட்ட சென்னகுணம் மற்றும் மணம்பூண்டி நியாய விலைக் கடைகளைப் பிரித்து பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கள்ளக்குறிச்சி மாவட்டம், திருக்கோவிலூர் தொகுதி, முகையூர் ஒன்றியம், ஆ. கூடலூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் புரவடை பகுதியைச் சேர்ந்த 110 குடும்ப அட்டைகளையும் சேர்த்து 1,010 குடும்ப அட்டைகளுடன் சென்னகுணம் முழுநேர நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. அரகண்டநல்லூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் மணம்பூண்டி முழுநேர நியாய விலைக் கடை 1 கி.மீ. சுற்றளவுக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 1,291 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. பகுதிநேரக் கடை புதியதாக அமைக்க வேண்டுமெனில் குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகளும், தாய்க் கடைக்கும், புதியதாக துவங்கக் கோரும் பகுதிநேர நியாயவிலைக் கடைக்கும் குறைந்தபட்சம் 1.5 கி.மீ. தூரம் இருக்க வேண்டுமென்ற அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாததால், இவ்விரண்டு இடங்களிலும் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் க. பொன்முடி, இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்கள்.*

திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய திருவெறும்பூர் தொகுதிக்குட்பட்ட திருநெடுங்குளம் ஊராட்சியில், கீழமாங்காவனம், மேலமாங்காவனம் என்ற இரண்டு சிறிய கிராமங்கள் இருக்கின்றன. கீழமாங்காவனத்தில் ஒட்டுமொத்தமாக 167 கார்டுகளும், மேலமாங்காவனத்தில் 75 கார்டுகளும், ஆகஏறத்தாழ 242 கார்டுகள் இருக்கின்றன. திருநெடுங்குளம் கிராமத்துடன் இந்தக் கார்டுகளையெல்லாம் இணைத்ததால் இங்கிருக்கின்ற மக்கள் 3 கி.மீ. தூரம் நடந்து சென்றுதான் பொருட்களை வாங்க*

வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஒரு கிராமத்திலிருந்து மற்றொரு கிராமத்திற்குச் செல்கின்றபோது அங்கிருக்கின்ற மக்களுடன் வாய்த்தகராறு ஏற்படுதல் போன்ற சூழ்நிலை நிலவுகிறது. நேற்றையதினம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த அவையில் பேசும்போது, சிறப்பு நேர்வுகளில் பகுதிநேர நியாய விலைக் கடை கண்டிப்பாக அமைத்துத் தரப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்தப் பகுதியில் மக்கள் railway gate-ஐக் கடந்தும், ஒரு ஆற்றுப் பாலத்தைக் கடந்தும் அங்கு செல்ல வேண்டிய சூழ்நிலைகளெல்லாம் இருக்கின்றன. ஆகவே, 167 கார்டுகள் இருக்கின்ற கீழமாங்காவனத்தில் ஒரு பகுதிநேர நியாய விலைக் கடையை அமைத்துத் தந்தால், மேலமாங்காவனம் கிராம மக்களும் அங்கு வந்து பொருட்களைப் பெற்றுக்கொள்ளும் சூழ்நிலை உருவாகும். ஏனென்றால், அந்தப் பகுதியில் வசிக்கின்ற மக்கள், குறிப்பாக, பெண்கள் வைக்கின்ற முக்கியமான கோரிக்கையே இதுவாகத்தான் இருக்கிறது. ஆகவே, தயவுகூர்ந்து இதைக் கருத்தில் கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கு பகுதிநேர நியாய விலைக் கடையை அமைத்துத் தர ஆவன செய்வார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்கள் கோரியிருக்கின்ற அந்தக் கடையை அமைப்பது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, சிறப்பு இனமாக, அந்தக் கடையை அமைப்பதற்காக துறை ரீதியாக அரசு பரிசீலிக்கும். ஏற்கெனவே, மாண்புமிகு அம்மாவின் அரசு பெரியபலமலை என்ற இடத்தில் 57 கார்டுகள் உள்ள நிலையில், கிராம மக்களுக்கு மாதந்தோறும் இரண்டு முறை சென்று பொருட்களைக் கொடுக்கிறார்கள். அதேபோன்று, சின்னபலமலை என்ற கிராமத்தில் 157 கார்டுகள்தான் இருக்கின்றன. அங்கும் கொண்டு போய்க் கொடுக்கிறார்கள். ஆக, இந்த அரசு ஆட்சிக்கு வந்த பிறகு பாரபட்சமற்ற முறையில், இதுபோன்ற சிரமங்கள் உள்ள பகுதிகளில், சிறப்பு இனமாகக் கருதி, நகரும் நியாய விலைக் கடைகளைக் கொடுப்பதற்கோ அல்லது பகுதிநேர நியாய விலைக் கடையை அமைப்பதற்கோ வழிவகை ஏற்படுத்தப்பட்டுள்ளது. எனவே,

2020 ஜனவரி 9]

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மூலமாக நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு அவர்கள்.*

டாக்டர் ஆர்.டி. அரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாறாய் வாழும் எங்கள் தலைவரை வணங்குகிறேன். செய்யூர் தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதி. அடிப்படை வசதிகள் அனைத்தும் சரிவர கிடைக்காத ஒரு தொகுதியாக இருந்துகொண்டிருக்கிறது. இந்த நிலையில், கூவத்தூரை உள்ளடக்கிய நாவக்கல் பகுதியில், பகுதிநேர நியாய விலைக் கடையை அமைத்துத் தருமாறு வேண்டுகிறேன். வெள்ளன்கொண்டாபுரம் பகுதியில், இந்தலூர், வன்னிநல்லூர் பழைய காலனி, சிறுமயிலூர் மற்றும் விடால் பகுதிகளில் உள்ள நியாய விலைக் கடைகள் மிகவும் சிதிலமடைந்து, பயன்பாட்டிற்கு உகந்த நிலையில் இல்லாததாலும், பல்வேறு நிலைகளில் மக்கள் அவதிப்படுகின்ற நிலையில் உள்ளதாலும், மேற்கண்ட பகுதிகளில் சிதிலமடைந்த நியாய விலைக் கடைகளைப் புதுப்பித்துத் தருமாறு தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக பகுதிநேர நியாய விலைக் கடைகளை துறை ரீதியாகவோ, சங்கங்கள் மூலமாகவோ பராமரிப்பது என்பது இயலாத காரியம். ஏனென்றால், அந்தப் பகுதி மக்களுக்கு இலவசமாகக் கொடுக்க வேண்டுமென்ற* condition-*உடன்தான் அந்தக் கடைகளைப் பிரித்துக் கொடுக்கின்றோம். மாண்புமிகு உறுப்பினர் சொன்னது போன்று, பழுதடைந்த கடைகள் இருப்பின், அதற்கான மாற்று இடத்தை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் பார்த்துக் கொடுப்பாரேயானால், அந்த இடத்தில் கடையை அமைத்துக் கொள்ளலாம். பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க வேண்டியபட்சத்தில், கிராமப்புறமாக இருந்தால் 1½ கி.மீ. தூரமும் 150 கார்டுகளும், சில பகுதிகளில் 500 கார்டுகளும் இருக்க வேண்டும். இல்லாவிட்டால், இதை சிறப்பினமாகக் கருதி, நடவடிக்கை*

எடுக்க வேண்டும். இதுபோன்று நிறைய மாமன்ற உறுப்பினர்கள் கேட்டிருக்கிறார்கள்; இதுபோன்ற இடங்களில் எப்படிச் செய்யலாம் என்று மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்களிடத்திலும் கலந்து பேசி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும்.

துறை ரீதியாக என்ன சொல்கிறார்களென்றால், சட்ட விதிமுறைகளின்படி 150 கார்டுகள் இருக்க வேண்டும்; 500 கார்டுகள் இருக்க வேண்டும்; 800 கார்டுகள் இருக்க வேண்டும்; நகரப் பகுதியாக இருந்தால் 1,000 கார்டுகள் இருக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். ஆகவே, இதற்கு விதிவிலக்கு அளித்து, இதுபோன்ற கடைகளைத் திறப்பதற்கு நடவடிக்கை எடுப்பது குறித்து நானும், மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்களும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைச் சந்தித்துப் பேசவிருக்கிறோம். அந்தச் சந்திப்பு முடிந்த பிறகு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எதிர்பார்க்கின்ற நல்ல முடிவை மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் அரசு நிச்சயமாக எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 18, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவ.வீ. மெய்யநாதன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

18—

புதிய மின்மாற்றி

***47337—திரு. சிவ.வீ. மெய்யநாதன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆலங்குடி தொகுதி, கத்தக்குறிச்சி ஊராட்சி, கண்ணியாப்பட்டியில் புதிய மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS